**① கீழ்வரும் வினாக்களுக்கு மிகப்பொருத்தமான விடையைத் தெரிவு செய்து, கீறிட்ட இடத்தில் எழுதுக.**

1. தமிழிலுள்ள முதலெழுத்துகளின் எண்ணிக்கை ________________
   அ) 247 ஆ) 30 இ) 12 ஈ) 18

2. மக்கள் வாழ்க்கையில் ஏற்படும் புறத்தோற்ற வளர்ச்சியை ________________ என்று கூறுவர்.
   அ) பழக்கவழக்கம் ஆ) பண்பாடு இ) நாகரிகம் ஈ) காலவேறுபாடு

3. உயர்திணைக்குரிய பால்வகைகள் ________________
   அ) ஆண்பால்,ஒன்றன்பால் ஆ) ஆண்பால்,பெண்பால்,பலர்பால்
   இ) ஒன்றன்பால்,பலவின்பால் ஈ) பெண்பால்,பலவின்பால்

4. துட்டகெமுனு காலத்தில் இலங்கையை ஆண்ட அறந்தவறாத **தமிழ்மன்னன்** ________________
   அ) பண்டாரவன்னியன் ஆ) எல்லாளன் இ) சங்கிலியன் ஈ) தேவநம்பியதீசன்

5. **'தமிழ்ச்செல்வம் ஆகமாட்டாயா?'** என்ற பாடலைப் பாடியவர் ________________
   அ) திருவள்ளுவர் ஆ) ஔவையார்
   இ) கனக.சுப்புரத்தினம் (பாரதிதாசன்) ஈ) காசி ஆனந்தன்

6. **'நாங்கள் தமிழ்மொழித் தேர்வு எழுதுவோம்'** எனும் வாக்கியத்தை முன்னிலையில் எழுதினால் ________________
   அ) அவன் தமிழ்மொழித் தேர்வு எழுதுவான்
   ஆ) நீங்கள் தமிழ்மொழித் தேர்வு எழுதுவீர்கள்
   இ) நான் தமிழ்மொழித் தேர்வு எழுதுவேன்
   ஈ) அவர்கள் தமிழ்மொழித் தேர்வு எழுதுவார்கள்

7. **எழில்** என்பதன் ஒத்த சொல் ________________
   அ) பொழில் ஆ) உண்மை இ) அழகு ஈ) மலர்

8. பின்வரும் கூட்டத்தில் குணப்பெயர்கள் ________________
   அ) அன்பு, நன்மை, வட்டம் ஆ) ஓடுதல், சிரித்தல், படித்தல்
   இ) இரவு, பகல், கோடை ஈ) பந்து, கண்ணன், மரம்

9. அரிவி வெட்டும் போது பாடப்படும் பாட்டு ________________
   அ) ஏர்ப்பாட்டு ஆ) தாலாட்டுப்பாட்டு இ) ஒப்பாரிப்பாட்டு ஈ) அறுவடைப்பாட்டு

10. **எழிலன் கடையிலே புத்தகம் வாங்கினான்.** இவ்வாக்கியத்தில் வந்த வினைச்சொல் ________________
    அ) புத்தகம் ஆ) வாங்கினான் இ) எழிலன் ஈ) கடை

11. இறைநெறி சாராத கொண்டாட்டம் ________________
    அ) தீபாவளி ஆ) ஆடிப்பிறப்பு இ) நத்தார் ஈ) ரமழான்

12. யாழ்ப்பாணத்தமிழரசின் கடைசி மன்னன் ________________
    அ) சங்கிலிகுமாரன் ஆ) எல்லாளன் இ) பண்டாரவன்னியன் ஈ) துட்டகெமுனு

13. **கடுங்குளிர்** என்பதைப் பிரித்தெழுதினால் ______________________
அ) கடுங் + குளிர் ஆ) கடுமை + குளிர் இ) கடு + குளிர் ஈ) கடுகு + குளிர்

14. கடையேழு வள்ளல்களில் ஒருவன் ______________________
அ) மாரி ஆ) கபிலர் இ) சேனன் ஈ) பாரி

15. ஒரு சொல் வேறுபட்டுள்ளது. அது ______________________
அ) கத்தரிக்காய் ஆ) பயற்றங்காய் இ) பாகற்காய் ஈ) தேங்காய்

16. வல்லினம் மெல்லினம் இடையினம் என்பவை ______________________
அ) உயிரெழுத்துகள் ஆ) மெய்யெழுத்துகள்

இ) உயிர்மெய்யெழுத்துகள் ஈ) சார்பெழுத்துகள்

17. தொலைபேசியைக் கண்டு பிடித்தவர் ______________________
அ) சாமுவேல் ஆ) சேவியர் இ) வில்லியம் ஈ) கிரகாம்பெல்

18. உயிரெழுத்துகளில் நெட்டெழுத்துகளின் எண்ணிக்கை ______________________
அ) 18 ஆ) 7 இ) 12 ஈ) 5

19. **எறும்பூரக் கற்குழியும்** எனும் பழமொழியின் கருத்து

____________________________________________

அ) எறும்பு கல்லில் வாழும்

ஆ) கல் குழிக்குள் இருக்கும்

இ) விடாது முயன்றால் முயற்சி வெல்லும்

ஈ) எறும்பு கல்லைத் தேய்க்கும்

20. **நீங்கள் + ஆல்** என்பதைச் சேர்த்து எழுதினால் ______________________
அ) நீங்களால் ஆ) நீயால் இ) எங்களால் ஈ) உங்களால்

21. **நான் பள்ளிக்குச் சென்றேன்.** இது ______________________
அ) தனிவாக்கியம் ஆ) தொடர்வாக்கியம் இ) வினாவாக்கியம் ஈ) கூட்டுவாக்கியம்

22. எமது தேசியப்பூவான **கார்த்திகைப்பூ** மிகவும் ______________________
அ) அளகானது ஆ) அலகானது இ) அழகானது ஈ) அழுகானது

23. **உண்மை** என்பதன் எதிர்ச்சொல் ______________________
அ) வாய்மை ஆ) பொய் இ) வெண்மை ஈ) மெய்

24. **'நீ அனுப்பிய மடல் கிடைத்தது'** இங்கே மடல் என்பது ______________________
அ) வாழைமடல் ஆ) அஞ்சல் இ) தாள் ஈ) மட்டை

25. நிகழ்கால இடைநிலைகள் ______________________
அ) ற்,ன் ஆ) ட்,ண் இ) கின்று,கிறு ஈ) ப்,வ்

26. **தேன்மொழி அழகான படம் ஒன்றை வரைந்தாள்.** இவ்வாக்கியத்தில் வந்துள்ள எழுவாய்

______________________

அ) படம் ஆ) வரைந்தாள் இ) அழகான ஈ) தேன்மொழி

27. **மரம் + ஐ** என்பதை சேர்த்தெழுதினால் ______________________
அ) மரத்தை ஆ) மரமை இ) மரம்ஜ ஈ) மரம்மை

28. அயலில் உள்ளவர்களுடன் நாம் எப்படி வாழவேண்டும்? ______________________
அ) பகையுடன் ஆ) தொடர்பின்றி இ) நட்பின்றி ஈ) நல்லுறவுடன்

29. ஆயுதம் ஏந்திய தமிழீழப் போராட்டம் ஆரம்பித்த ஆண்டு ______________________
அ) 1983 ஆ) 1972 இ) 1973 ஈ) 1956

30. கவிஞர் காசி ஆனந்தன் எந்த நாட்டில் பிறந்தார்? ______________________
அ) இந்தியா ஆ) நோர்வே இ) இலங்கை ஈ) சிங்கப்பூர்

(30 புள்ளிகள்)

② **பாடலைப் படித்து, தரப்பட்டுள்ள வினாக்களுக்கு முழுவிடை தருக.**

தமிழே எங்கள் உயிராகும்
தாய்மண்ணே எங்கள் உடலாகும்
உடலும் உயிரும் இருந்தாலே
உலகில் நிலைத்து வாழ்திடலாம்

எங்கள் தாயகம் தமிழீழம்
ஏதிலி மண்ணாய் ஆகுவதோ?
எதிரியின் கொடுமை கண்டஞ்சி
ஏங்கிஅஞ்சி வாழ்வோமோ?

மண்ணுக்காக வாழ்ந்த எங்கள்
மாவீரர் தம்மை வணங்கிடுவோம்
மாவீரர் நாளை மனத்திருத்தி
மலரும் தமிழீழ நாள் நோக்கி
மாற்றம் ஒன்றைப் படைத்திடுவோம்
மனதிற் கொள்வோம் இதைநாளும்

1. நாம் யாரை வணங்க வேண்டும்?
______________________
______________________

2. நாம் எதை நாளும் மனதில் கொள்ள வேண்டும் என்று கவிஞர் கூறுகிறார்?
______________________
______________________

3. தமிழர் மனதில் இருத்த வேண்டிய நாள் எது?
______________________
______________________

4. எங்கள் உயிரும் உடலுமாக இருப்பவை எவை?
______________________
______________________

5. இப்பாடலிலிருந்து நீர் விளங்கிக் கொள்வது என்ன?
______________________
______________________

(10 புள்ளிகள்)

③ **வாழிடமொழியிலுள்ள பந்தியை வாசித்து, தமிழ்மொழியில் மாற்றிஎழுதுக.**

Iniyavan reiste til landsbyen sin med buss. Da buss kom til landsbyen, reiste Iniyan opp fra sete. Det lå en veske (sekk) like ved hans fot. Han tok (plukket) den opp og så på (undersøkte) den. Han tenkte å levere den til eieren (den som hørte til). Han kikket rundt men han så ingen. Iniyavan tok han den med seg ut. Han tenkte om hvem han skal levere vesken (sekken) til. Han lette etter adressen inn i den, men han fant ingenting. Han tok den sekken med seg til politistasjon. Han fortalte politiet om dette og leverte den der. Politiet skrøt og roset Iniyavan.

(05 புள்ளிகள்)

## ④ கீழே காணும் பகுதியைப் படித்து, தரப்பட்டிருக்கும் வினாக்களுக்கு முழுவிடை எழுதுக.

ஒரு கழுதையும் ஒரு நரியும் நட்புடன் வாழ்ந்து வந்தன. ஒரு நாள் அவை இரண்டும் வேட்டையாடச் சென்றன. தொலைவில் ஒரு சிங்கத்தைக் கண்டன. நரி தங்களுக்கு வரப்போகும் துன்பத்தை உணர்ந்து விட்டது. அது தன் உயிரை மட்டும் காப்பாற்றிக் கொள்ள நினைத்தது.

கழுதையைச் சிங்கத்திடம் காட்டிக் கொடுத்தால், தான் உயிர் தப்பலாம் என்று எண்ணியது. "சிங்கத்திடம் நமது உயிரைக் காப்பாற்றும்படி இரந்து கேட்கப் போகிறேன்" என்று கூறிவிட்டுத் தனியே சென்றது. சிங்கத்தைப் பார்த்து "அரசே! நீங்கள் என்னைக் காப்பாற்றினால், நான் உங்களுக்குப் பெரிய கழுதையைப் பிடித்துத் தருகிறேன்" என்றது. சிங்கம் சரி என்று தலையை அசைந்தது.

நரி தந்திரமாகக் கழுதையிடம் பேசி அதை ஒரு பள்ளத்தை நோக்கிக் கூட்டிச் சென்றது. கழுதை ஏமாந்த நேரத்தில் அதைப் பள்ளத்தில் தள்ளிவிட்டது. பள்ளத்தில் விழுந்த கழுதை தப்பமுடியாது என்பதைத் தெரிந்து கொண்ட சிங்கம், முதலில் நரியைக் கொன்று தின்ன, நரியின் மேல் பாய்ந்தது.

1. நரி, தான் சிங்கத்திடமிருந்து எவ்வாறு உயிர் தப்பலாம் என்று எண்ணியது?

______________________________

______________________________

2. கழுதையும் நரியும் எப்படி வாழ்ந்து வந்தன?

______________________________

______________________________

3. நரி ஏன் கழுதையைப் பள்ளத்தை நோக்கிக் கூட்டிச் சென்றது?

______________________________

______________________________

4. சிங்கம் ஏன் கழுதையை முதலில் கொல்லவில்லை?

______________________________

______________________________

5. இக் கதைக்குப் பொருத்தமான ஒரு தலைப்புத் தருக.

______________________________

______________________________

(10 புள்ளிகள்)

## ⑤ கீழ்வரும் இலக்கண வினாக்களுக்கு விடை தருக.

1. தரப்பட்ட நிகழ்காலச் சொற்களை, இறந்தகாலத்திற்கும் எதிர்காலத்திற்கும் எழுதுக.

| இறந்தகாலம் | நிகழ்காலம் | எதிர்காலம் |
|---|---|---|
| | நடக்கிறேன் | |
| | உண்கிறான் | |
| | கட்டுகின்றனர் | |
| | இழுக்கிறது | |
| | பாய்கின்றன | |

2. திணை எத்தனை வகைப்படும்? அவற்றின் பால்வகைகள் எவை?

3. அறுவகைப் பெயர்ச்சொற்கள் எவை? அவற்றுள் இண்டிற்கு எடுத்துக்காட்டுத் தருக.

4. **ஆடுகிறான்** இச்சொல்லை பகுதி, விகுதி, இடைநிலை எனப் பிரித்தெழுதுக.

5. தொடர்ச்சொல்லியம் (வாக்கியம்) ஒன்று எழுதுக.

(10 புள்ளிகள்)

## ⑥ தரப்பட்டுள்ள பாடநூல் வினாக்களுக்கு முழுவிடை எழுதுக.

1. மாமன்னன் எல்லாளன் எத்தனை ஆண்டுகள் இலங்கையை ஆட்சி செய்தான்?

2. சுற்றுலாச் செல்வதால் மாணவர் அடையும் பயன்களைக் கூறுக?

3. பண்பாடு, நாகரிகம் இரண்டிற்குமிடையேயான வேறுபாடு என்ன?

4. கொண்டாட்டங்கள் எதற்குத் துணைபுரிகின்றன?

5. வீட்டுத்தோட்டத்தினால் நாம் அடையக் கூடிய பயன்கள் எவை?

(15 புள்ளிகள்)

**⑦ கீழ்வருவனவற்றில் ஒன்றினைத் தெரிவு செய்து 100 சொற்களிற்குக் குறையாமல் எழுதுக.**

**மாமன்னன் எல்லாளன்**

- ஆட்சி செய்தல்
- ஆராய்ச்சிமணி
- நீர்நிலைகளைச் செப்பனிடல்
- குளங்கள் கட்டல்
- மகாவம்சம் போற்றல்
- துட்டகெமுனு
- பௌத்த நெறியைக் காப்பதற்கான போர்
- போர்முறைக்கு மாறாக எல்லாளனைக் கொன்றான்

**தொடர்பாடல்**

- **நன்மை**
  கல்வி, உலகச்செய்தி, அறிவியல் அறிவு, விளையாட்டு, பொழுதுபோக்கு, கலைகள்
- **தீமைகள்**
  - கல்வி, உடல்நலம், உளநலம் கெடுதல்
  - தவறான விளம்பரங்களும் பரப்புரைகளும்
  - தொடர்பாடல் முறைகளைப் பயன்படுத்துபவர்களின் இயல்பைப்பொறுத்தே நன்மையும் தீமையும் விளையும்.

**வீட்டுத்தோட்டம்**

- வீட்டுத்தோட்டம்
- ஐரோப்பா, ஆசிய நாடுகளில் பயிர்செய்யும் காலம்
- வீட்டுத்தோட்டத்தின் நன்மைகள்
- பசளைகள்
  - இயற்கைப்பசளை
  - செயற்கைப்பசளை

(20புள்ளிகள்)